குழு சிபார்சு செய்தாலும், நம்முடைய அரசாங்கம் அதற்கு இரையாகாமல், அந்தக் கொள்கையை விடாமல், திரும்பவும் இந்தப் பரீட்சையை நீடித்து வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத்தலைவர் அவர்களே, அத்தகைய தேர்வு முறைகளைக் கைவிடுவதாக இந்த அரசுக்கு எண்ணம் இல்லை. தேர்வுகள் வைத்தால்தான் முறைப்படிப் பயிலுவதற்கும், மாணவர்கள் அக்கறையோடு படித்துத் திறமை பெறுவதற்கும் வழிவகை இருக்கிறது. தேர்வு வைக்காமலிருந்தால் அவர்கள் படிக்காமலே இருக்கிறார்கள் என்பதுதான் நடைமுறை அனுபவமாக இருக்கிறது. வாரத்திற்கு வாரம் தேர்வு வைத்து, மாதத்திற்கு மாதம் தேர்வு வைத்து, இறுதித் தேர்வு வைக்கும் பள்ளிகளிலேதான் தேர்வு பெற்றவர்களுடைய எண்ணிக்கைச் சத வீதம் உயர்ந்து காணப்படுகிறது. ஆகவே, தேர்வுகளை நீக்கிவிடுவதாக இல்லை. ஆண்டின் இறுதியில் நடத்தப்படும் தேர்வின் எண்ணிக்கையும், கால் தேர்வு, அரைத் தேர்வு ஆகியவற்றினுடைய எண்ணிக்கையும் உள்ளடக்கிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத்தான் முதலில் தெரிவித்தேன். இதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

Post-Graduate Classes.

* 396 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether Grade I Professors in Government Colleges only are posted to handle post-graduate classes ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

State Educational Loan

* 397 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state ;

(*a*) whether it is a fact that the benefits of the State Educational Loan Rules are not extended to the students studying in the Indian Institute of Technology, Madras, and the Regional Engineering College, Tiruchirappalli, and

(*b*) if so, the steps taken to extend the same to the students of this State studying in these institutions ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தை விரிவாக்குவது குறித்து பரிசீலனை செய்து, நிறுத்தி வைக்கப்பெற்றுள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, students taking up different courses of study in the Arts as well as Technical colleges are being given this facility of State educational loan. Why is this denied to the students studying only in the Indian Institute of Technology as the studies imparted there are also considered to be very beneficial in the interest of the State? As it has been denied so far, will the Government reconsider it and extend the facilities to those students also ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திலே பணிபுரிகின்ற அரசிதழ் பதிவுபெறாத அலுவலர்களுடைய குழந்தைகளுக்கும், ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கும், அரசாங்கத்தினுடைய நிர்வாகத்திற்கு உட்பட்டு இயங்குகிற எல்லாக் கல்வி

1967 ஜூலை 18]

நிலையங்களிலும் இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது. டி.டி.இ., டி.எச்.இ., டி.பி.ஐ., டி.எம்.இ., ஆகியவர்கள் நிர்வாகத்தின்கீழ் இருக்கும் எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் அளிக்கப்படுகிறது. மற்ற தனியார் நடத்துகிற கல்வி நிறுவனங்களில் அத்தகைய கடன் வசதி அளிப்பதுதான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க நிர்வாகத்தின்கீழ் உள்ள கல்வி நிலையங்களில் பயிலுகிறவர்களுக்கு அளிக்கப்படும் கடன் தொகையைத் திருப்பி வசூலிப்பதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. கடன் தொகை திருப்பி வராத நிலைமை, விட்டுவிட்டுத் தருகிற நிலைமை, படித்து முடிந்ததும் வேலையில் இருக்கிறார்களா இல்லையா, என்கிற தகவலை அறிந்துகொள்ள முடியாத நிலைமை, முகவரி அறிவிக்காத நிலைமை, இப்படிப் பல சங்கடங்கள் இதிலே இருப்பதால்தான், இதை நம்முடைய அரசாங்க அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிற நிறுவனங்களைப் பொறுத்து மட்டும் வழங்கிவிட்டு, தனியார்த் துறை நிறுவனங்களில் புகுத்துவதில் காலதாமதம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

தொழிற்பயிற்சி நிலையம், நாகப்பட்டினம்

*398 வினா—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் சர்க்கார் நடத்தும் தொழிற்பயிற்சிப் பள்ளியில் 1965–66, 1966–67 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மொத்த மதிப்பு என்ன ?

(இ) இவைகளுக்காக வாங்கப்பட்ட மூலப் பொருள்களின் மொத்த மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தொழிற்பயிற்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், அங்கு பயிற்சி பெறுபவர்கள் பயிற்சிக் காலத்தில் பயிற்சிக்காகவும், மாதிரிக்காகவும் செய்யப்பட்டவை. ஆதலால், அந்த மாதிரி உருவங்களுக்காக உபயோகப்படுத்தப்பட்ட மூலப் பொருள்களின் விலை, அங்கு செய்யப்பட்ட முழுமைப் பொருள்களின் விலையெனக் கொள்ளப்படுகிறது. இதற்காக வாங்கப்பட்ட மூலப்பொருள்களின் மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	ரூ.	பை.
1965–66-ம் ஆண்டு	1,371	40
1966–67-ம் ஆண்டு	908	26

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஐயா, தொழிற்பயிற்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இந்தப் பொருள்கள் அங்கே பயிற்சிக்காக உபயோகப்படுத்தப்பட்டாலும் கூட, அந்தப் பொருள்கள் விற்கப்படுகின்றன. அந்தப் பொருள்கள் விற்கப்பட்டதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பயிற்சிப் பள்ளிகளில் செய்யப்படுகிற பொருள்கள் விற்பனைக்காக என்று கருதிச் செய்யப்படுவதில்லை. அங்கே பயிற்சிக்காகவும், மாதிரிக்காகவும் செய்யப்படுகின்றன. அவை பிறகு விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. விற்பனைக்கு வைக்கும்போது, மூலப் பொருள்கள் என்ன விலைக்கு வாங்கப்பட்டனவோ அதே விலைதான், காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷனுக் கணக்கிடப்பட்டு விற்கப்படுகிறது. இரண்டு ஆண்டுக்காலம் பொருள்கள் விற்கப்படாமல் இருந்தால், 25 சதவிகிதம் கழித்துக்கொடுத்து, மறுபடியும் விற்பனை செய்வதற்கு முயற்சி செய்யப்படுகிறது. மறுபடியும் ஓரளவு விற்பனை ஆகாமல் இருக்குமானால், மேற்கொண்டு 25 சத வீதம் கழிவு தரப்படுகிறது. அதற்குப் பிறகும் அந்த மாதிரிப் பொருள்கள் விற்பனை ஆகாமல் இருக்குமானால், பிறகு அவைகளெல்லாம் ஏலம் விடப்படுகின்றன. அந்த வகையிலே சில பொருள்கள் மட்டும் ஏலம் விடப்படுகின்றன. இந்தப் பொருள்கள் செய்வதற்காக 1965–66-ம் ஆண்டில் வாங்கப்பட்ட மூலப் பொருள்களின் மதிப்பு ரூ. 1,371·40. 1966–67-ம் ஆண்டில் வாங்கப்பட்ட மூலப் பொருள்களின்